செய்தி வெளியீடு எண்–832 நாள்–31.12.2007

## செய்தி வெளியீடு

மழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட சாலை மற்றும் பால சேத பணிகள் பற்றிய ஆய்வு 31.12.07 அன்று மாலை சென்னை, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்களால் நடத்தப்பட்டது.

24558 கி. மீ. சாலைகளும், 64 பெரிய பாலங்களும், 1449 சிறு பாலங்களும் சேதமடைந்தன. 45 இடங்களில் சாலைகள் மற்றும் பாலங்கள் துண்டிக்கப்பட்டு போக்குவரத்து தடைபட்டது. இதற்கு தற்காலிக சீரமைப்பிற்கு சுமார் 280 கோடி தேவை என மதிப்பிடப்பட்டது.

இன்று வரை 13466 கி. மீ. சாலைகளும், 20 பெரிய பாலங்களும், 1096 சிறு பாலங்களும் சரி செய்யப்பட்டன.

41 இடங்களில் சாலைகள் மற்றும் பாலங்கள் துண்டிக்கப்பட்டது சரி செய்யப்பட்டு போக்குவரத்து நடைபெறுகின்றது.

கடலூர் மாவட்டம் திருமானிக்குழி என்ற இடத்தில் துண்டிக்கப்பட்ட பாலமும், மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் கோழி குப்பம், கோமாசி குப்பம், மணலூர்பேட்டை சாலை பாலமும் இன்னும் 10 தினங்களுக்குள் சரி செய்து போக்குவரத்திற்கு பயன்பாட்டிற்கு விடப்படும்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.

குறிப்பு– மேலும் விவரங்களுக்கு நெடுஞ்சாலைத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் திரு. சந்திரசேகர் (9444418504) அவர்களை தொடர்பு கொள்ளவும்.